**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (கடன் இல. 2947 எஸ்ஆர்ஐ மற்றும் 2948 எஸ்ஆர்ஐ) - 2014**

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 28 ஆம் திகதிய 2947 எஸ்ஆர்ஐ மற்றும் 2948 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க செயற்திட்ட மற்றும் கடன் உடன்படிக்கையின் 2.10 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சும் தற்போதைய நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் வசிப்பவர்களிற்கான நகர சூழல் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டமானது கொழும்பு நகரத்தில் நீர் வழங்கல் முறைமை, கொழும்பு நகரத்தில் வருமானமற்ற நீரைக் குறைத்தல், கொழும்பு பெரும்பாகத்தில் கழிவு நீர் அகற்றல் சேவையை முன்னேற்றுதல், மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் சேவை வழங்குநரின் இயலளவு, முகாமை, அமுலாக்கல் முதலீடு என்பவற்றின் நிறுவனரீதியான உட்கட்டமைப்பை மற்றும் சேவை இயலளவை வலுப்படுத்தல் என்பவற்றினை புனரமைப்பதற்கும் விரிவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்பட்டன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 14,784 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 112 மில்லியனாகும் அதில் ரூபா 11,088 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 84 மில்லியன் அல்லது 75 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தொகை ரூபா 3,696 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 28 மில்லியன் அல்லது 25 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டும். நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 யூன் 28 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்ட ரூபா 7 மில்லியன் தொகையான கடப்பாட்டு மற்றும் சேவைக் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்காக பெறுமானத்தேய்வு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவில் ஏற்பட்ட ரூபா 7.6 மில்லியன் தொகையான பெறுமதி சேர்வரி உரிய சொத்துக்களின் கீழ் மூலதனமாக்குவதற்குப் பதிலாக நடைபெறும் வேலையின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

**2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆசிய அபிவிருத்தி வங்கியால் செய்யப்பட்ட நெறிப்படுத்தலின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் பதவியணியினருக்காக 2014 ஏப்ரல் 30 அன்று அல்லது அதற்கு முன்னர் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய வேலை விபரம் மற்றும் வேலை விதப்புரைகள் 2015 மார்ச் 31 வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் வசதி நிர்வாக கைநூலின் 43 ஆம் பிரிவின் பிரகாரம், முகாமைத்துவ ஆலோசகர் மற்றும் மேற்பார்வை ஆலோசனையாளர் என்போர் செயற்திட்டத்தின் வெற்றிகரமான அமுலாக்கலிற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு உதவுவதற்கும் 2013 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு அளவில் ஆலோசனை வேலையை ஆரம்பிப்பதற்கும் நியமிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய ஆலோசனையாளர் 2015 மார்ச் 31 வரையும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிப் பயன்பாடு**

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **மூலம்** | **கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை** | | **மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு** | **நிதிகளின் பயன்பாடு** | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | **மீளாய்வாண்டின் போது** | | **2014 திசெம்பர் 31 வரை** | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 84 | 11,088 | 1,477 | 7.18 | 932.00 | 7.18 | 932 |
| இலங்கை அரசாங்கம் | 28 | 3,696 | 630 | 0.70 | 91.93 | 1.18 | 155 |
| மொத்தம் | 112 | 14,784 | 2,107 | 7.88 | 1,023.93 | 8.36 | 1,087 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பட்டியலிடப்பட்ட காலத்திற்குள் ஒதுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களினை அடைதலை உறுதிப்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்ட் முழுக்காலத்தையும் மேவி மாதாந்த, காலாண்டு, அயையாண்டு போன்றவற்றில் நிர்ணயிக்கின்ற பொறுப்புக்களுடன் நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டும் விரிவான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய திட்டம் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 112 மில்லியன் நோக்கெல்லையிலுள்ள மாற்றங்கள், மேலதிக கிரயங்கள் காரணமாக பின்னர் ஐ.அ.டொலர் 170 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், 2015 ஏப்ரல் 30 வரையும் நிதி இடைவெளியை நிரப்புவதற்கு எவ்வித ஒழுங்குகளும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 2.7 சதவீதம் மற்றும் 7.3 சதவீதமாக இருந்தது. மிகுதியான 2 ஆண்டு காலப்பகுதிக்குள் மீதி வேலைகளின் பூர்த்தியாக்கலின் சாத்தியத்தன்மை போதிய நடவடிக்கை எடுக்காவிடின் ஐயத்திற்கிடமாக உள்ளது.

## 3.3 விதிவிலக்கான நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தால் ரூபா 32.5 மில்லியன் மற்றும் ரூபா 733,829 இற்காக கொள்வனவு செய்யப்பட்ட முறையே ஆறு மோட்டார் வாகனங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் நிகழ்ச்சித்திட்டத்துடன் நேரடியாக தொடர்புபட்டிருக்காத நோக்கங்களிற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினுடைய பிராந்திய அலுவலகத்தின் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வழமையாக, செயற்திட்ட பதவியணியினரின் வேதனங்களின் கணப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்படுகின்றதுடன் அதன் நிர்வாக வேலைகளிற்காக செயற்திட்டம் போதிய பதவியணியினரை சேர்த்திருந்த போதிலும் மேந்தலை செலவினத்தின் 20 சதவீதம் செயற்திட்டத்திலிருந்து அறவிடப்படுகின்றன. மீளாய்வாண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செயற்திட்டத்தல் செலுத்தப்பட்ட அவ்வறான மேந்தலைக் கட்டணங்கள் ரூபா 9.1 மில்லியனாகும்.

(இ) 2014 இல் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், கசிவு கட்டுப்பாட்டு நோக்க செயற்பாட்டிற்கான உபகரணம் 2015 சனவரி 31 இற்கு முன்னர் வழங்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. அத்தகை உபகரணங்கள் ரூபா 2.1 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் 2014 திசெம்பர் 31 இல் செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 மே 30 வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4. நிதிக் கட்டுப்பாட்டு விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கட்டுபாட்டை உறுதிப்படுத்துவதற்கு இயலக்கூடியவாறு உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தால் பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் பிரகாரம், அடிப்படைச் சம்பளம், படிகள் மற்றும் கழிப்பனவுகள் போன்ற தகவல்கள் உள்ளடங்கிய விரிவான பட்டியல் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்டிருக்கவில்லை. ஆகவே, மீளாய்வாண்டின் போது நிகழ்ச்சித்திட்டத்தால் செலுத்தப்பட்ட ரூபா 55.7 மில்லியன் தொகையான பதவியணியினர் வேதனங்கள் தொடர்பான விரிவான தகவல்கள் கணக்காய்விற்கு உடனடியாக கிடைத்திருக்கவில்லை.